Registered as a NewsPaper

விலை ரூபா 6.00

# ஈழநாதம்

EELANATHAM மக்கள் நாளிதழ்

பக்கங்கள் ~ 08

வவுனியா ஒப்டிக்கல்
Vavuniya Optical
கண் பரிசோதிக்கப்பட்டு மூக்குக் கண்ணாடி 1/2 மணித்தியாலத்தில் பெற்றுக் கொள்ளலாம். உங்கள் வைத்திய துண்டுகளுக்கும் உடன் கண்ணாடி வழங்கப்படும்.
வவுனியா ஒப்டிக்கல்,
30 பஸ் நிலையம்,
வவுனியா. (சி-7815)

நாதம் 14 | திருவள்ளுவர் ஆண்டு 2034 | பங்குனி - 16 | 30-03-2003 | ஞாயிற்றுக்கிழமை | ஓசை 40

## அரசியல்துறைப் பொறுப்பாளரைச் சந்தித்துவிட்டு அரசியல் விவகாரக்குழு புறப்பட்டுச் சென்றது



(அலுவலக செய்தியாளர்)

சர்வதேச நாடுகளின் சமஷ்டி முறை குறித்து அறிந்து கொள்ளச் செல்லும் விடுதலைப் புலிகளின் 16 பேர் கொண்ட அரசியல் விவகாரக் குழு நேற்றுக் காலை அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்களைச் சந்தித்து உரையாடியது.

இதன் பின்னர் இக்குழுவினர் வாகனம் மூலம் காலை 9.30 மணியளவில் கொழும்பு புறப்பட்டுச் சென்றனர். இக்குழு நேரடியாக கொழும்பிலிருந்து நோர்வேக்குச் சென்று பின்னர் பின்லாந்து, சுவீடன், டென்மார்க் ஆகிய நாடுகளுக்கும் செல்லவுள்ளமை தெரிந்ததே.

(08ஆம் பக்கம் பார்க்க)

### - அமெரிக்காவின் ஈராக் மீதான -

# தரைவழித் தாக்குதல்கள் இடைநிறுத்தம்;

# கார் குண்டுவெடிப்பில் 4 அமெ. படையினர் பலி!

## ஏவுகணைகள், விமானங்கள் மூலம் தொடர்ந்து ஈராக்மீது தாக்குதல்

**அமெரிக்கப் படையினரை இலக்கு வைத்து ஈராக்கியர் நேற்று நடத்திய கார் குண்டுத் தாக்குதலில் நான்கு அமெரிக்கப் படையினர் பலியாகியுள்ளனர். இதேவேளை பாக்தாத்தை நோக்கிய அமெரிக்கப் படையினரின் தரைத்தாக்குதலை ஆறு நாட்களுக்கு இடைநிறுத்தி இருப்பதாக அமெரிக்க இராணுவ தளபதிகள் தெரிவித்துள்ளனர்.**

தெற்கு ஈராக் பகுதியில் அமெரிக்கப்படையினரது சோதனைச்சாவடி ஒன்றில் வைத்து தற்கொலைத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

வாடகைக் கார் ஒன்றினை அமெரிக்கப் படையினர் சோதனையிட்டபோது குண்டை வெடிக்க வைத்து தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

தாக்குதலை நடத்திய ஈராக்கியரும் நான்கு அமெரிக்கப் படையினரும் இதில் பலியாகினர்.

சோதனைச்சாவடியில் 4

(08ஆம் பக்கம் பார்க்க)



அமெரிக்காவின் குண்டுத்தாக்குதலில் கொல்லப்பட்ட ஈராக்கியர்களின் சடலங்கள்.

### - பேருந்துப் பயணத்தின்போது -

## சுகப் பிரசவத்திற்குதவிய மருத்துவப் போராளி

(அலுவலக செய்தியாளர்)

பேருந்தில் பயணம் செய்த பெண்ணொருவர் பிரசவ வேதனையால் தவித்தவேளை தியாகதீபம் திலீபன் மருத்துவமனைப் போராளி ஒருவர் சிகிச்சை மேற்கொண்டுள்ளார்.

மேற்படி பெண் கொழும்பில் இருந்து முல்லைத்தீவு மாத்தளன் பகுதிக்கு பேருந்தில் சென்று கொண்டிருந்தவேளை நைனாமடுவிற்கும் குளவி சுட்டானுக்கும் இடையில் ஏற்பட்ட பிரசவ வேதனையால் அவதிப்பட்ட வேளை தியாகதீபம் திலீபன் மருத்துவமனையில் கடமை புரியும் மருத்துவப் போராளி ஒருவர் அவசர சிகிச்சை மேற்கொண்டு சுகப் பிரசவத்திற்கு உதவி யுள்ளமை குறிப்பிடத்தக்கது. (பா)

## இரு பாரவூர்திகள் குடைசாய்ந்தன

(அலுவலக செய்தியாளர்)

ஏ-9 கண்டி-நெடுஞ்சாலையில் இரண்டு பாரவூர்திகள் குடை சாய்ந்துள்ளன. நேற்று இயக்கச்சிப் பகுதியில் யாழ். நோக்கி சென்று கொண்டிருந்த பாரவூர்தி ஒன்று தடம்புரண்டுள்ளது.

இதேபோன்று கனகராயன் குளம் பகுதியில் நெல் ஏற்றிக் கொண்டு வவுனியா நோக்கிச் சென்று கொண்டிருந்த பாரவூர்தி ஒன்று தடம் புரண்டுள்ளது. இதில் சாரதி காலில் காயமடைந்துள்ளார். (பா)

## சீன மீனவரின் சடலம் செஞ்சிலுவையிடம் கையளிப்பு

(அலுவலக செய்தியாளர்)

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசமான நாகர் கோவில் கடற்கரையில் கரையொதுங்கிய சீன மீனவரின் சடலம் நேற்று புளியங்குளம் சோதனைச் சாவடியில் வைத்து விடுதலைப் புலிகளினால் பி.ப. 1.30 மணியளவில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரிடம் கையளிக்கப்பட்டது.

கடந்த 28ஆம் திகதியன்று நாகர்கோவில் கடற்கரைப் பகுதியில் கரையொதுங்கிய மேற்படி சடலம் காவல்துறையினரால் பொறுப்பேற்கப்பட்டு, சீர் செய்யப்பெற்று காவல்துறையினர், விடுதலைப்புலிகளின் மரியாதையுடன் புளியங்குளம் சோதனைச் சாவடியில் வைத்து நேற்று சர்வதேச செஞ்சிலுவைச் சங்க வவுனியா வதிவிடப் பிரதிநிதியிடம் கையளிக்கப்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (சோ. லோ)



## தமிழீழப் பெண்களை ஒன்றுதிரட்ட பெண்கள் தேசிய மாநாட்டில் தீர்மானம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் நடைபெற்ற பெண்கள் தேசிய எழுச்சி மாநாட்டில் தாயக விடுதலைப் போரில் அனைத்து தமிழீழப் பெண்களையும் ஒன்று திரட்டுவது உட்பட பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

சமூக பெண்கள் மேம்பாட்டு அமைப்பின் அனுசரணையுடன் தேசிய மகளிர் மாநாடு மட்டக்களப்பு நகரில் நேற்று மூன்றாவது நாளாக இடம்பெற்றது.

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி ரமேஸ் தமிழீழ தேசியக்கொடியை ஏற்றி வைபவத்தை ஆரம்பித்து வைத்தார். பொதுச்சுடரை பிராந்திய அரசியல் துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் ஏற்றி வைத்தார்.

நேற்றைய மாநாட்டின் முக்கிய நிகழ்வாக, பெண்கள் பிரகடனத்தை தமிழீழ மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழினி சமர்ப்பித்தார்.

இப்பிரேரணையில்; தமிழீழத் தாயகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் ஒன்றுகூடி எழுச்சியடைந்த தமிழீழப் பெண்களாகிய நாம் கிராமம், பிரதேசம், மாவட்டம் தோறும் சமூக

(08ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### தேவை

சில்லறைப்பணம் எமக்குத் தேவையாகவுள்ளது. 1000 ரூபா தருபவர்களுக்கு 50 ரூபா வீதம் வழங்கப்படும். தொடர்புகளுக்கு. மதி உணவகம், பரந்தன் சாலை. புதுக்குடியிருப்பு. (சி-7729)


# வீரவணக்கக் கூட்டமும் நடுகல் திரைநீக்கமும்

கடந்த 01-02-1998ஆம் ஆண்டு ஆனையிறவு பரந்தன் பகுதியில் நிலைகொண்ட இராணுவத்தினருடனான மோதலின் போது வீரச்சாவைத் தழுவிக் கொண்ட வீரவேங்கை செஞ்சோழன் (ஜெய சங்கர் ஜெயசீலன் - 2ஆம் யுனிற் பாலிநகர், வவுனிக்குளம்) என்னும் மாவீரரின் திருவுருவப் படம் பாலிநகர் மகாவித்தியாலய மண்டபத்தில் நேற்று முன்தினம் காலை 11.00 மணிக்கு வைக்கப்பட்டு வீரவணக்கக் கூட்டம் இடம் பெற்றது.

ஈகச்சுடரினை வீரவேங்கை செஞ்சோழனின் தாயார் ஏற்றி வைத்தார். மலர் மாலையினை மாவீரரின் பேத்தியார் அணிவித்தார். தொடர்ந்து வீரவணக்க நிகழ்வுகள் இடம்பெற்றன.

வீரவணக்க உரையினை பாலிநகர் ம.வி ஆசிரியர் திரு. சு. கேதீஸ்வரன், ஒட்டங்குளம் தேசிய எழுச்சிப் பேரவையின் செயலாளர் தனியநாயகம், துணுக்காய் பிரதேச பொறுப்பாளர் தர்மேந்திரன் ஆகியோர் நிகழ்த்தினர்.

இறுதியாக திருவுருவப்படம் அலங்கரிக்கப்பட்ட ஊர்தியில் வன்னிவிளாங்குளம் மாவீரர் துயிலும் இல்லம் எடுத்துச் செல்லப்பட்டு அங்கு பூரண இராணுவ மரியாதைகளுடன் நினைவுக்கல் திரைநீக்கம் செய்யப்பட்டது. (பா)

## கண்டெடுப்பு

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி கணேசபுரம் வீதியிலிருந்து வீட்டுத்திறப்புடன் வேறும் சில திறப்புக்கள் சி.மோகன் என்பவரால் கண்டெடுக்கப்பட்டு கிளிநொச்சி ஈழநாதம் விளம்பரப்பணிமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் ஆதாரத்தினை காண்பித்து அலுவலக நேரத்தில் வந்து பெற்றுக் கொள்ளவும். (சோ.லோ)


**கெயார் சர்வதேசம் - இலங்கை**
**எதிர்காலத்திற்கான சமுதாய முன்னெடுத்தல் திட்டம்**
(LIFT Project)

## விவசாய பயிற்சி உதவியாளர் (ATA) ஆட்சேர்ப்பு

(1 வெற்றிடம் -வன்னி)

ஆற்றலும் கடின உழைப்பும் கொண்ட இருபாலாரிடமும் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| **1) பதவி** | : | விவசாய பயிற்சி உதவியாளர் |
| **2) கல்வித்தகைமைகள்** | : | அடிப்படை விவசாய பட்டப்படிப்பு அல்லது விவசாய டிப்ளோமா |
| **3) முன் அனுபவம்** | : | தொடர்புடைய துறையில் மூன்று வருட அனுபவம். |
| **4) சம்பளம்** | : | தகைமைக்கு அமைவாக கெயாரின் வழமையான நன்மைகளையும் கொண்டிருக்கும். |
| **5) நியமனம்** | : | புதுப்பிக்கக்கூடியஒப்பந்தஅடிப்படை. |

தகுதியுடையோர் சுயவிபரக் கோவையை உறவினரல்லாத இரு மத்தியஸ்தர் பெயர்களுடன் Director Human Resources, Care International- Sri Lanka, No 7A, Gregory's Road, Colombo.7
E-mail : hr@care.lk.

என்ற முகவரிக்கு 10-04-2003ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்க வேண்டும்.

**வன்னியில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை.**

**விண்ணப்பங்கள் யாழ்ப்பாணம், புதுக்குடியிருப்பு, முழங்காவிலில் உள்ள கெயார் அலுவலகங்களில் கையளிக்கப்படலாம்.**

**பணிப்பாளர்- மனித வள அபிவிருத்தி,**
**கெயார் சர்வதேசம், இலங்கை.**

(3053)


## 3ஆம் ஆண்டின் நினைவில்...

| தாயின் மடியில் | | தாயக மண்ணில் |
|---|---|---|
| 23 | | 02 |
| - | | - |
| 08 | | 04 |
| - | | - |
| 1967 | | 2000 |



# மேஜர் அமுதா

**(கந்தையா- சரஸ்வதி)**
**கோப்பாய் மத்தி**

**அன்பின் உறைவிடமே எங்கள் அமுதா**
**ஆண்டு மூன்று கழிந்ததம்மா**
**மருத்துவ நாயகியே மகத்தான கண்மணியே**
**மண்ணிற்காய் வித்தாகிப் போனாயே**
**சாதனைகள் பல படைத்து சமர் ஓய்ந்த வேளையிலே**
**சமாதானம் நிலவும் இந் நாள் தன்னில்**
**நல்லெண்ணம் கொண்ட நாமகளை**
**நாமெல்லாம் காணத் துடிக்கின்றோம்**
**தன்மானத் தலைவனின் இலட்சியப் பாதையிலே**
**தயங்காது தன்னை அர்ப்பணித்து**
**தாயக விடுதலைக்காய் உரமாகிப் போனவளே**
**தலை சாய்த்து உன்னை வணங்குகின்றோம்.**

ஓயாத அலைகள் மூன்று வெற்றிச் சமரின் போது 02.04.2000 அன்று வீரச்சாவடைந்த ஏனைய மாவீரர்களையும் இந்நாளில் நினைவு கூருகிறோம்.

**மா. கந்தையா (தந்தை)**
**267,3ஆம் யுனிற்,**
**பாரதிநகர்,**
**மல்லாவி.**

(2916)


உ
ஓம் சக்தி







# கிளிநொச்சி - ஸ்கந்தபுரம், இத்தியடி

## அருள்மிகு

# ஸ்ரீ நடனமுத்துமாரி அம்பாள் ஆலய

## வருடாந்த

# அலங்கார உற்சவமும், வருஷாபிஷேகமும்

### அம்பாள் அடியார்களே!

*நிகழும் சித்திரபானு வருஷ பங்குனி 17 திங்கட்கிழமை (31.03.2003) திகதி தொடக்கம் (10) பத்து நாட்கள் ஸ்கந்தபுரம் அருள்மிகு ஸ்ரீ நடன முத்துமாரி அம்பாளின் வருடாந்த அலங்கார உற்சவம் ஆரம்பமாகி நிகழும் சித்திர பானு வருடம் பங்குனி மாதம் 26ம் திகதி (09.04.2003) புதன்கிழமை திருவாதிரை நட்சத்திரத்தின் சங்காபிஷேகமும் அடுத்த நாள் வைரவர் மடையும் நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம்.*

*இங்ஙனம்,*
*ஆலய பரிபாலன சபையினரும்,*
*திருவிழா உபயகாரர்களும்.*

*விளம்பர அன்பளிப்பு,*
*சம்பந்தன் அரிசி ஆலை,*
*இல- 93, ஸ்கந்தபுரம்.*
*கிளிநொச்சி.*

(3054)

# அகோர தாக்குதலால் பாக்தாத் அதிர்ந்தது

# பொதுமக்கள் தரப்பில் பெரும் இழப்பு!

## -அதிகாலை வேளை நடந்த அவலம்

**ஈராக் தலைநகர் மீது நேற்று அதிகாலை அமெரிக்கா தலைமையிலான கூட்டுப்படைகள் கடும் விமான மற்றும் ஏவுகணைத் தாக்குதல்களை நடத்தின. இதனால் பொதுமக்களுக்கு பெரும் இழப்புக்கள் ஏற்பட்டிருப்பதாக அங்கிருந்து வெளியாகும் தகவல்கள் தெரிவிக்கின்றன. அத்தோடு நேற்று அதிகாலை சிறியளவிலான மோதல்களும் இடம்பெற்றதாக அறிவிக்கப்படுகின்றது.**

பாக்தாத் மீது நேற்று அதிகாலை இடம்பெற்ற அமெரிக்க பிரிட்டிஷ் விமானங்களின் தொடர் குண்டு வீச்சுக்களால் பாக்தாத் நகரில் 10 பேருக்கும் அதிகமான பொது மக்கள் இறந்துள்ளனர்.

அத்துடன் ஏவுகணைத் தாக்குதல்களினால் மத்தியபகுதியிலுள்ள ஈராக் தகவல் திணைக்களக் கட்டடமும் சேதமடைந்துள்ளது.

சனாதிபதி சதாம் ஹூசைன் தனது நாட்டையும் முப்படைகளையும் கட்டுப்படுத்தமுடியாமல் திண்டாட வேண்டும் என்பதற்காகவே தகவல் தொடர்பு திணைக்களம் மீது ரொமகொக் ஏவுகணைகள் வீசப்பட்டுள்ளதாக அமெரிக்க படைத்தலைமை கூறியுள்ளது.

பஹ்ரா நகரில் ஈராக்கின் 200 துணை இராணுவப் படைவீரர்களின் கூட்டம் நடந்த கட்டடம் மீதும் அமெரிக்கப்போர் விமானங்கள் லேசர்குண்டுகளைப் போட்டு அழித்துள்ளன. தரைமட்டமான அந்த இரண்டு மாடிக் கட்டடத்திலிருந்து எவரும் வெளிவரவில்லையென கூட்டுப்படைகளின் தலைமை அதிகாரி கூறியுள்ளார்.

பாக்தாத்தை நோக்கி நகரும் அமெரிக்கப்படைகளை நகஸ்கர் நகரருகே 1500 ஈராக்கியப்படையினர் வழிமறித்து தாக்குதல்களை நடத்தியுள்ளனர்.

இந்த ஈராக்கியக் குடியரசுக் காவல்ப்படைகளின் தாக்குதல்களைத் தாங்கள் எதிர்பார்த்ததாக அமெரிக்கத் தளபதிகள் கூறுகின்றனர்.

நஸரியா நகரில் நடைபெற்ற கடும்சண்டைக்குப் பின்னர் 04 அமெரிக்க மாலுமி வீரர்கள் காணாமல் போயுள்ளதாகவும் கூறப்படு கின்றது.

கூட்டுப்படை மீதான தாக்குதல் நடைபெற்றதால், பாக்தாத் நோக்கிய நகர்வு மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாகவும், ஈராக் எதிர்ப்பு எப்படி இருக்கும் என்று மதிப்பிடாமல் இந்தப் போர் நடவடிக்கை தொடங்கப்பட்டு விட்டதாக அமெரிக்கப்பத்திரிகைகள் கூறுகின்றன.

இதனிடையே தெற்கு ஈராக் பஹ்ராவில் தாக்குதல்களில் இருந்து தப்பிக்க குழந்தைகள், பெண்கள் என குடும்பம் குடும்பமாக மக்கள் வெளியேறி வருகின்றனர். அவர்கள் மீதும் தாக்குதல்கள் நடைபெறுவதாகக் கூறப்படுகின்றது.

எனினும் முழுமையான வெற்றி கிடைக்கும்வரை போர் ஓயாது என சனாதிபதி புஷ் கூறியுள்ளார்.



பாக்தாத்தில் தீப்பற்றியெரியும் எண்ணெய் வயலொன்றின் முன்பாக உதைபந்தாட்டம் விளையாடும் இளைஞர்கள்.

## பிளேயரின் சரியான மதிப்பீடு!

(லண்டன்)

ஈராக் சனாதிபதி சதாம் ஹூசைனை பதவியில் இருந்து இறக்குவது கடினமானது எனப் பிரிட்டிஷ் பிரதமர் ரொனிபிளேயர் கூறியுள்ளார்.

தனது 02 நாள் அமெரிக்க விஜயத்தை முடித்துவிட்டு, பத்திரிகையாளர்களைச் சந்தித்த ரொனி பிளேயர் இவ்வாறு கூறியுள்ளார்.

## இஸ்ரேலியப் படை தாக்குதல் இருபலஸ்தீனர்கள் பலி!

பலஸ்தீனத்தின் காஸாவிற்கு வடக்கே நேற்று முன்தினம் இஸ்ரேலியப் படையினர் நடத்திய தாக்குதலில் 02 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

கவசவாகனங்கள், உலங்குவானூர்திகள் சகிதம் இஸ்ரேலியப் படையினர் இத்தாக்குதலை நடத்தியதாக பலஸ்தீன அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

ஈராக் மீதான போர் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து இஸ்ரேலியப் படையினர் தமது தாக்குதல்களின் வேகத்தைக் குறைத்துள்ளதாகவும் கூறப்படுகின்றது.



பாக்தாத்தில் எண்ணெய் வயல்கள் தீப்பற்றி எரியும் வேளை பிடிக்கப்பட்ட செய்மதிப் படம்.

# ஈராக் விவகாரத்தில் தலையிட வேண்டாம் சிரியா, ஈரான் நாடுகளுக்கு எச்சரிக்கை!

## -ஆயுத உதவி குறித்தும் சந்தேகம்

(வாஷிங்டன்)

சிரியா, ஈரான் ஆகிய இரு நாடுகளையும் ஈராக்கில் தலையிடு செய்ய வேண்டாமென்று அமெரிக்கா எச்சரிக்கை செய்துள்ளது.

சிரியாவில் இருந்து இராணுவ உபகரணங்களும் தளபாடங்களும் சதாம் ஹூசைனின் படைகளுக்கு உதவுவதற்காக ஈராக்கினுள் கொண்டு செல்லப்படுவதாகத் தகவல்கள் கிடைத்துள்ளதாக அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் ரம்ஸ்பீல்ட் பெண்டகனில் கூறியுள்ளார்.

இந்த ஆயுதக் கடத்தல்களால், கூட்டுப்படைகளுக்கு உயிராபத்து எதிர்நோக்கப்படுவதுடன் சிக்கலான நிலைமைகளை இவை தோற்றுவிப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

ஆனால், இதற்கு மறுப்புக் கூறியுள்ள சிரியா, ஈராக்கில் பெருந்தொகையான குடிமக்கள் கொல்லப்படுவதை வெளியுலகிற்குத் தெரியாமல், தடுப்பதற்காக இத்தகைய பொய்க்குற்றச்சாட்டுக்களே இவை என்றும் கூறியுள்ளது.

அதேபோல், ஈரானும் ஈராக்கினுள் பலநூற்றுக்கணக்கானோருக்கு ஆயுதங்கள் வழங்கியுள்ளதாக அமெரிக்கா குற்றம் சாட்டியுள்ளது.

## ஈராக்கில் சமாதானத்தை வலியுறுத்தும் சவுதிஅரேபியா

## - போரில் பங்கேற்க மறுப்பு

(அல்-றியாத்)

ஈராக்கிற்கு எதிராக தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் இராணுவத் தாக்குதலையிட்டு சவுதி அரேபியா அனுதாபமும் கவலையும் கொள்வதுடன், சகோதர நாடான ஈராக்கிற்கு மேற்கொள்ளப்பட்டுவரும் யுத்தச் செயற்பாடுகள் எதிலும் கலந்துகொள்வதில்லை என்ற புதிய நிலைப்பாட்டையும் கொண்டுள்ளதுடன் சவுதி அரேபியப் படைகள் ஈராக்கிற்குள் எவ்விதத்திலும் உட்செல்லாது எனவும் சவுதி அரேபியா கூறியுள்ளது.

எவ்வித வன்முறைகளும் இன்றி ஈராக்கின் இறைமைக்கும் பாதுகாப்பிற்கும் பங்கம் ஏற்படாமல் இராணுவ நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டு சமாதானம் நிலைநாட்டப்பட வேண்டும் என்று சவுதி அரேபிய வெளிவிவகார அமைச்சர் இளவரசர் சஹூட் அல் பைசால் செய்தி வெளியிட்டுள்ளார்.

## அமெரிக்க உதவி


(வாஷிங்டன்)

ஈராக்கில் மேற்கொள்ளப்படவிருக்கும் மனிதாபிமான நடவடிக்கைகளுக்கு வாஷிங்டன் 1 கோடி 80 இலட்சம் டொலர்களை ஐ.நா விடம் வழங்கியுள்ளது.

இதில் 1கோடி டொலர்கள் உலக சுகாதார ஸ்தாபனத் திற்கும், 80 இலட்சம் டொலர்கள் ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியத்திற்கும் வழங்கப்பட்டுள்ளன.



வட ஈராக்கில் குர்திஷ் இன மக்களின் கிர்குக் பகுதியிலிருந்து ஈராக் படைகள் வெளியேறிய பின் அப்பகுதிக்குச் செல்லும் குர்திஷ் போராளிகள்.



தாக்குதலுக்கான இலக்கை குறிவைக்கும் அமெரிக்காவின் B-2ரக விமானம்.

# உலகக் கிண்ணம் ஓர் பார்வை

ஜெயந்திரன்

தென்னாபிரிக்காவில் நடந்து முடிந்த 8வது உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டிகளின்



முடிவு பல அணிகளுக்கு மாற்றங்கள் ஏமாற்றங்கள் புதிய தொடக்கங்கள் ஆகியவற்றைக் கொடுத்தன என்றால் மிகையில்லை.

பந்து வீசுவது துடுப்பெடுத்தாடுவது புதிய யுக்திகளை கையாள்வது என அனைத்துத் துறைகளிலும் சிறந்துவிளங்கிய அவுஸ் அணி உலகக் கோப்பையை வென்றது பொருத்தமானது என்று உலகெங்கிலும் உள்ள கிரிக்கெட் விமர்சகர்களினதும் முன்னாள் கிரிக்கெட் ஆட்டக்காரர்களினதும் பொதுவான கருத்து.

ஜோகன்னஸ் பேர்க் வொன்டரஸ்ட் மைதானத்தில் நடந்த இறுதியாட்டத்தில் அவுஸ்திரேலிய அணி மற்றைய அணிகளைவிட தரத்திலும் விளையாடும் விதத்திலும் சிறந்து விளங்கியது வெளிப்படையாவே தெரிந்தது.

உலகக்கோப்பை போட்டிகள் தெற்காசிய நாடுகளான இலங்கை இந்தியா, பாகிஸ் தான் நாடுகளில் இயல்புவாழ்க்கையைப் பாதித்தது என்றால் மிகையாகாது. அத்துடன் ரசிகர்கள் நடந்துகொண்டவிதமும் ஆச்சரியத்தை ஏற்படுத்துவதாக இருந்தது.

ஆரம்பசுற்றுப்போட்டி ஒன்றில் அவுஸ்திரேலியாவிடம் இந்திய அணி படுதோல்வி அடைந்தபின் கொல்கத்தாவில் இந்திய அணித்தலைவர் கங்குலியின் கொடும்பாவி எரிக்கப்பட்டது. ஹைப்பின் வீடு தாக்கப் பட்டது.

ஆனால் இந்திய அணி பரபரப்பாக நடைபெற்ற போட்டி ஒன்றில் பாகிஸ்தானை வீழ்த்தியதன் பின் இந்திய நகரத்தில் கோலாகலக் கொண்டாட்டம். இந்திய அணி இறுதி ஆட்டத்திற்குத் தகுதிபெற்றதும். கங்குலி அணிக்கு தலைமையேற்று நடத்திச் சென்ற விதத்தை போற்றிப் புகழாத ஊடகங்களே இல்லையென்று கூறலாம்.

இந்திய அணி இறுதியாட்டத்தில் வெற்றிபெற வேண்டும் என்று சிறப்புப் பூசைகளும், வழிபாடுகளும் நடாத்தப் பட்டன. சச்சின் டெண்டுல்கரின் படங்களை வைத்து யாகங்கள் கூட நடத்தப்பட்டன.


இந்த உலகக்கிண்ணப் போட்டியின் தொடக்கமே சர்ச்சைக்குரியதாகத்தான் ஆரம்பமானது. சிம்பாவ்வே நாட்டில் நிலவும் அரசியல் சூழ்நிலை காரணமாக இங்கிலாந்து அணி சிம்பாவ்வேயில் சென்று விளையாட மறுத்தது. பின்னர் பாதுகாப்புக் காரணங்களைக்காட்டி கென்யாவில் நடைபெற்ற போட்டியில் நியூசிலாந்து அணி ஆடமறுத்துவிட இந்த அணிகளின் முடிவுகள் அவர்களுக்கே பாதகமாக அமைந்தன. குறைவான புள்ளிகளைப் பெற்ற இங்கிலாந்து முதல் சுற்றிலேயே நாடு திரும்ப, சுப்பர் சிக்ஸ் இரண்டாவது சுற்றில் நுழைந்து அரையிறுதிக்கான வாய்ப்பை இழந்தது. நியூசிலாந்து. அவுஸ்திரேலிய அணி வெற்றி பெற்றாலும் அவ்வணிக்கு தர்மசங்கடத்தை ஏற்படுத்தும் விதமாய் அந்த அணியின் சுழற்பந்து வீச்சாளர் ஷேன்வோர் உடலை ஊக்கப்படுத்தும் மருந்தை உட்கொண்டார் என்ற குற்றச்சாட்டில் உலகக்கிண்ணப் போட்டியில் இருந்து வெளியேற்றப்பட்டார்.

இந்த உலகக்கிண்ணப் போட்டியில் மற்றொரு சிறப்பம்சம் என்னவென்றால் கென்ய அணி விளையாடிய விதம்தான் மூன்று டெஸ்ட் விளையாடும் நாடுகளை வீழ்த்தி அரையிறுதிக்கு தகுதிபெற்ற கென்ய அணி, பல ரசிகர்களின் பாராட்டைப் பெற்றதுடன் தரவரிசையில் டெஸ்ட் அந்தஸ்து பெற்ற பங்களாதேஷ் அணியைப் பின்னுக்குத் தள்ளியது.

இப்போட்டி பலருக்கு புதிய வாய்ப்புக்களைத் தந்தாலும் உலகக்கோப்பைப் போட்டியில் புகழ்பெற்ற கிரிக்கெட் ஆட்டக்காரர்களின் கடைசி உலகக்கோப்பை போட்டியாகவும் அமைந்துவிட்டது.

பாகிஸ்தான் அணி முதல் சுற்றிலேயே நாடுதிரும்பியதால் அணித்தலைவர் வக்காரிடம் இருந்து தலைவர் பதவி பறிக்கப்பட்டு அவருக்குப்பதிலாகக் ஓய்வு பெற்ற விக்கெட்காப்பாளர் லத்திப் மீண்டும் அழைக்கப்பட்டு அணியின் தலைவர் பதவி ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அடுத்த ஆண்டு சனவரி மாதம் வரை



அணித்தலைவர் பதவியில் இருக்கப்போகும் அவர் 7டெஸ்ட் போட்டிகள் மற்றும் 25 ஒருநாள் போட்டிகளுக்கு தலைமைப்பதவி



வகிப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

அவுஸ்திரேலியாவுடனான அரையிறுதிப் போட்டியில் தோற்றுப்போன சிறிலங்கா அணித்தலைவர் ஜெயசூரியா அணித் தலைவர் பதவியிலிருந்து விலகுவதாகத் தெரிவித்திருந்தாலும் சிறிலங்கா கிரிக்கெட் நிர்வாகம் அதை ஏற்கமறுத்ததுடன் தொடர்ந்தும் அப்பதவியில் அவரை அமர்த்தியுள்ளது.

உலகக்கிண்ணத்தை அவுஸ்திரேலிய அணி வென்றாலும் போட்டியின் சிறந்த ஆட்டக்காரராக இந்திய அணியின் சச்சின் டெண்டுல்கர் அதிகபட்சமாக 673 ஓட்டங்களைக் குவித்து சாதனை படைத்ததுடன், உலகக்கிண்ணப் போட்டித்தொடர் ஒன்றில் அதிக ஓட்டங்களைப்பெற்ற பெருமையைப் பெற்றார். அதற்கு அடுத்தபடியாக 465 ஓட்டங்களை கங்குலி பெற்றார். பந்து வீச்சில் அதிகபட்சமாக சமிந்தவாஸ் 23 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். பிரட்லி 22 விக்கெட்டுக்களை வீழ்த்தி இரண்டாவது இடத்தைப் பெற்றார். ஒட்டுமொத்தத்தில் நடந்து முடிந்த 8வது உலகக்கிண்ணப் போட்டி எதிர் பார்ப்புக்களை பொய்யாக்கி வேதனைகளுடனும், சாதனைகளுடனும் நிறைவு பெற்றது.

# ஓரம் கட்டப்படுகிறாரா முரளி?

சார்ஜா கிண்ணப்போட்டியில் கலந்துகொள்ளும் சிறிலங்கா அணியில் உலகின் தலைசிறந்த சுழற்பந்து வீச்சாளரான முத்தையா முரளிதரன் இடம்பெறவில்லை.


முரளிதரனுக்கு ஏற்பட்ட உபாதையே இதற்குக் காரணம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ் உபாதை உலகக்கிண்ணப் போட்டியில் மேலும் அதிகரித்துள்ள தாகவும் இதனால் ஓய்வு தேவை எனவும் கூறப்பட்டுள்ளது.

இந்நிலையில் முரளிதரனோ இம் முடிவு குறித்து வியப்படைந்துள்ளதுடன் தொலைக்காட்சிப் பேட்டிஒன்றையும் வழங்கியுள்ளார்.

என்னால் விளையாட முடியுமா இல்லையா? என்று ஒருவரும் என்னிடம் கேட்கவில்லை எனவும், சார்ஜா போட்டிகளில் விளையாடுவதற்கு பூரண தகுதியை தான் கொண்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார். இதனால் இவ் அறிவிப்பு முரளிதரனின் கிரிக்கெட் வாழ்க்கையில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் ஒன்றாக மாறியுள்ளது.

சர்வதேசத் தரத்திலான டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிகளில் அதிக விக்கெட்டுகளை வீழ்த்தியவர்கள் வரிசையில் மூன்றாவது இடத்தில் இருக்கும். முரளிதரன் ஒருநாள் போட்டிகளில் 300 க்கு மேற்பட்ட விக்கெட்டுக்களை சாய்த்துள்ளதுடன் இதுவரை 78 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 437 விக்கெட்டுக்களை வீழ்த்தியுள்ளார்.

இந்நிலையில் முரளிதரன் மீது மேற்கொள்ளப்பட்ட மேற்படி நடவடிக்கை அவரை அணியில் இருந்து தூக்கி எறிவதற்கான ஆரம்ப கட்ட நடவடிக்கையா என எண்ணத் தோன்றுகின்றது.



1996ஆம் ஆண்டு அர்ஜுண ரண துங்க தலைமையிலான அணியில் பிரவேசித்த முரளிதரன் அன்றிலி ருந்து பெரும் சவால்களைச் சந்தித்து அணியின் வெற்றி வாய்ப் புக்கு மற்றைய வீரர்களை விட அதிகளவிலேயே பங்காற்றி வருகின்றார். அது இன்று வரை நீடித்தே வருகின்றது.

31 வயதை நெருங்கிவிட்ட முரளிதரன் அணியில் அனுபவத்தில் அணித்தலைவர் ஜெயசூரியாவுக்கு அடுத்த நிலையில் இருக்கின்ற போதும் உத்தியோக பூர்வமாக வெறும் பந்துவீச் சாளராகவே இருக்கின்றார். இதன் மூலம் அவர் ஓரம் கட்டப்பட்ட ஒருவராகவே நீண்ட காலமாக ரசிகர்களால் பார்க்கப்பட்டு வருகின்றார். அது தற்போது நிருபணமாகியுள்ளது.

முரளிதரனைப் பொறுத்தவரையில் கடந்தகாலப் பெறுபேறுகளின் அடிப்படையில் பார்த்தால் நடைபெற்று முடிந்த உலகக் கிண்ணப் போட்டியில் பெரிதாக சாதிக்கத் தவறிய போதும் வேகப் பந்து வீச்சுக்கே சாதகமான ஆடுகளத்தில் ஏனைய சுழல் பந்து வீச்சாளர்களைவிட சிறப்பாகவே பந்து வீசியுள்ளார்.

அத்துடன் சுப்பர் சிக்ஸ்சுக்கு தகுதி பெற் றாலே ஆச்சரியம் என்ற நிலை யில் இருந்த அணியை அந்நி லைக்கு இட்டுச் செல்வதில் முரளியின் பங்கு அதிகளவில் இருந்ததை மறுக்க முடியாது.

போட்டி முடிவுகளை எதிரணி வீரர்கள் அதிசயிக்கும் வகையில் மாற்றி அமைக்கும் முரளிதரன் சிறிலங்கா அணியில் இடம் பெறாதுபோவது அவரின் சாத னைப் பயணத்தில் தாமதத்தை ஏற்படுத்தினாலும் அவரின் சாதனைக்கு தனியிடம் எப்போதுமே உண்டு. இதற்கு விஸ்டன் சஞ்சிகையின் சிறந்த பந்துவீச்சாளருக்கான பதிவு உறுதிப்படுத்துகின்றது.

இவை ஒருபுறமிருக்க குறுகிய ஓவர்களில் அதிக ஓட்டங்களைக் குவிக்கும் நிலை மாறி இடைத்தர நிலையில் நின்று ஆடி இறுதியில் வெற்றி இலக்கை அடைய முடியாது திணறும் சிறிலங்கா அணி முரளிதரனை ஓரம் கட்டி போட்டிகளில் கலந்துகொள்ளுமாயின் பல அகாலச்சாவை அடைவது தவிர்க்கமுடியாத தாகவே இருக்கும்.

# சாதனைகளும் வேதனைகளும்

43 நாட்களாக உலகின் கவனத்தை தன்பால் ஈர்த்திருந்த உலகக்கிண்ணக்கிரிக்கெட் திருவிழா கடந்த 23ஆம்திகதி நிறைவு பெற்றது யாவரும் அறிந்ததே. இதில் தனிப்பட்ட ரீதியிலும் அணி ரீதியிலும் ஈட்டப்பட்ட முக்கிய சாதனைகளும் வேதனைகளும்.

## சாதனைகள்

**அதிக ஓட்டங்கள்**
அவுஸ்திரேலியா 359/2
எதிர்
இந்தியா
சிம்பாவ்வே. 340/2
எதிர்
நமீபியா

**அதிக சிக்சர்கள்**
மேற்கிந்தியத் தீவுகள்-28
தென்னாபிரிக்கா-26

**அதிக ரண் அவுட் செய்தது**
தென்னாபிரிக்கா-5

**குறைந்த உதிரிகள்**
கென்யா-41
சிம்பாவ்வே-56

விரைவான ஓட்டக் குவிப்பு
அக்தார்(பாக்) 16 பந்துகளில் 43 ஓட்டங்கள், லாறா(மே.இ.தீவு)23 பந்துகளில்
அரைசதம் டேவிர்சன் 67 பந்துகளில் சதம்.

**சிக்கனப் பந்து வீச்சு**
கிலெஸ்பி(அவுஸ்) 10-02-13-3
பொலக்(தென்.ஆ) 6-2-8-2

**குறைந்த பட்ச நோபோல்**
சிம்பாவ்வே-01
நெதர்லாந்து-02

## வேதனைகள்

**குறைந்த பட்சஓட்டங்கள்**
கனடா-36
எதிர்
சிறிலங்கா

**வாரி வழங்கிய பந்து வீச்சு**
டிம்டி லீடி
வான்சூரின் (நமீபியா) வீச்சு
10-0-92-0
நெதர்லாந்து) 7-0-69-2

**குறைந்த சிக்சர்கள்**
சிறிலங்கா-04
கென்யா-09

**அதிகபட்ச நோபோல்**
பாகிஸ்தான்-29
தென்னாபிரிக்கா-23

**அதிக ரண் அவுட் ஆனது**
பாகிஸ்தான்-05
கனடா-04
இந்தியா-04

**அதிக உதிரிகள்**
பாகிஸ்தான்-129
இந்தியா-105

**மந்தமான ஓட்டக்குவிப்பு**
எஸ்வர் மராஜ்(கனடா) 155 பந்துகளில்
53 ஓட்டங்கள் எதிர்
தென்னாபிரிக்கா

# போர்க்கள வெற்றிகளால் பெற்ற இராணுவ சமநிலை மக்களிடையே பெரும் நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது

## - வெற்றிவிழா நிகழ்வில் தளபதி கேணல் பால்ராஜ்

எமது போர்க்கள வெற்றிகளால் விடுதலைப்புலிகளின் இராணுவ சமநிலை வெளிப்பட்டுள்ளது. சிறிலங்காவின் சகல படைகளும், புதிய பல்வேறு ஆயுதங்களும் என அனைத்தையும் இணைத்து மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்- அதனை எதிர்கொண்டு விடுதலைப்புலிகள் பெற்ற வெற்றி எம்மீது பெரும்நம்பிக்கையை புலம்பெயர்ந்த மக்கள் உட்பட அனைவருக்கும் ஏற்படுத்தியது இவ்வாறு தளபதி கேணல் பால்ராஜ் தெரிவித்தார்.

ஆனையிறவு பெருந்தள வெற்றிக்கு வித்திட்ட குடாரப்பு தரையிறக்க மூன்றாம் ஆண்டு வெற்றிவிழா கடந்த புதனன்று நடைபெற்றபோதே அந்நிகழ்வில் கலந்து கொண்ட கேணல் பால்ராஜ் மேலும் உரையாற்றுகையில்;

விடுதலைப்புலிகளால் இந்த ஆனையிறவுத்தளத்தை எவ்வாறு கைப்பற்ற முடியும் என எமது மக்களும், புலம்பெயர் மக்களும் வெளிஉலகும் சந்தேகம் கொண்டிருந்தனர். நம்பிக்கை இழந்திருந்தனர். ஆனால் எமது தலைவரும் நாமும் உறுதியான நம்பிக்கையுடன் தான் இருந்தோம். இவ்வேளை தலைவர் அவர்கள் எம்மை அழைத்து ஆனையிறவைக் கைப்பற்றவேண்டும். அதற்கான வேவு நடவடிக்கையில் ஈடுபடவேண்டும் என அந்த நடவடிக்கையில் ஈடுபட எம்மைப் பணித்திருந்தார். அந்தவேளை இங்கு சரியான காலநிலை இல்லை. மாரிகால மானதால் கடலடி அதிகரித்து காணப்பட்ட காலமாக இருந்தது. நாங்கள் முன் பக்கத்தால் பார்த்தால் ஐந்து மீற்றருக்கு ஒன்று என்றவகையில் மிகவும் இறுக்கமான காவலரண்கள் கட்டைக்காட்டில் இருந்தன. ஊரியான் வரையும் மிகவும் நெருக்கமான காப்பரண் இருந்தது. தனங்கிளப்பு வரையும் மிகவும் இறுக்கமான காவலரண்கள். தனங்களப்பில் இருந்து கொழும்புத்துறை வரை மிகவும் இறுக்கமான காவலரண்கள். அதனூடாக உள் நுழைவதென்றால் மிகவும் கடினம். கடற்பகுதியால் எவ்வாறு உட்செல்லவேண்டும். எவ்வாறு செயற்பட வேண்டும் என -தளபதி சூசை அவர்களின் தலைமையில் கடலாதிக்கத்தைச் சிறப்பாகச் செய்து கொண்டிருந்தனர். - கடற்புலிகள். அப்போது நான் சூசையிடம் கேட்டேன் எப்படியாவது கடலடிக்குள்ளால் இந்த வேவு அணியைத் தரையிறக்க வேண்டும். இதை எப்படியாவது நீங்கள் செய்தால்தான் நாங்கள் ஆனையிறவை மீட்பதற்கான வேவு நடவடிக்கையைச் சிறப்பாக மேற்கொள்ள முடியும் எனக் கூறினேன். அதற்கு அவர் குறிப்பிட்டார்; தான் நிச்சயமாகத் தரையிறக்குவதாக உறுதியளித்தார். அதற்கிணங்க மிகவும் திறமையான போராளிகளை விட்டு குடாரப்பு பகுதிக்கு அப்பால் சென்று- எமது வேவு அணிகளைக் கொண்டுசென்று மிகவும் பத்திரமாகத் தரை இறக்கினார்கள். தளபதி கோகுலன், தளபதி கலையழகன் தலைமையில் நாம் வேவுப்பணிகளை இணைத்திருந்தோம். மிகவும் இரகசியமாக எதிரியின் காப்பரண்களுக்கிடையில் ஊடுருவிப் பல நாட்களாக குறிப்பிட்ட உணவுப் பொருட்களுடன் ஆனையிறவுப் பகுதிக்குள்ளே ஊடுருவி இரண்டு மாதமளவில் தங்கியிருந்தார்கள்.

தலைவர் அவர்களுக்கு எமது வேவு நடவடிக்கையை வரைபடம் மூலம் காட்டிய போது தான் ஆனையிறவுக்குப் பின் பகுதியால் பலபாதைகள் எடுக்கப்பட்டன. அப்போது தலைவர் அவர்கள் வரைபடத்தைப் பார்த்து விட்டு கூறினார்; யுத்தம் ஆனையிறவில் அல்ல குடாரப்புவில் தான்; அடுத்தது இத்தாவில் தான்; அப்போது எனக்கு மிகவும் வியப்பாக இருந்தது. எத்தனை கிலோமீற்றருக்கு அப்பால் இந்த இராணுவ முகாம் இருக்கிறது. இந்த குடாரப்பு பகுதியில் யுத்தம் என்கின்றாரே அதில் இரண்டு டிவிசன் இராணுவம் இருக்கிறது என நான் கூறினேன். அப்போது தலைவர் அவர்கள் கூறினார். இரண்டு டிவிசன் அல்ல. நான்கு டிவிசனாக இருந்தாலும் சரி. இங்கே தான் யுத்தம். இதைத் துண்டாடி அறுத்து நிச்சயமாக அனைத்தையும் அழித்து விடுவேன் என உறுதியாகக் கூறினார். அதன்பின் திட்டம் விளங்கப்படுத்தப்பட்டது. நிச்சயமாக இதை வென்றே தீரவேண்டும் என்பதையும் நிச்சயமாக உங்களைக் கொண்டு சென்று தரை இறக்குவேன். ஆனால் உங்களைத் திருப்பி ஏற்றுவதற்கு வண்டி அனுப்ப மாட்டேன். நீங்கள் வருவதானால் கண்டி வீதியால் தான் வரவேண்டும் என தலைவர் கூறினார். இத்தகைய கருத்துக்கள்தான் நிச்சயமாக எம்மை வெற்றி கொள்ள வைத்தது என நான் கூறுவேன். தலைவரது திட்டம் எங்களுக்கு மிகவும் தெளிவாக இருந்தது. எதிரி இந்த நடவடிக்கையின் போது என்ன செய்வான், எவ்வாறு செயற்படுவான், எத்தகைய பிரச்சினைகளை நீங்கள் எதிர்கொள்ள வேண்டி வரும், எவ்வாறு நீங்கள் செயற்பட வேண்டும். இந்த யுத்தம் மாதக் கணக்கிலும் நடக் கலாம் என்பதைப் பற்றி சகல தளபதி களுக்கும் விரிவாக எடுத்துக் கூறி யிருந்தார். அந்த வகை யிலே குடாரப்புப் பகுதிக்குரிய அணித் தளபதி கேணல் விதுசா தலைமையில் இந்த 'பொக்ஸ்' நடவடிக் கையை ஒப்படைந்திருந்தோம். அதாவது இங்கே நாகர்கோவில் பகுதியை கவர் பண்ணும் ஒரு தாக்குதல் பிரிவு, மருதங்கேணிப் பகுதியால் தப்பி ஓடிவரும் இராணுவத்தைத் தாக்கும் ஒரு பிரிவு, கண்டல் பகுதியை கவர்பண்ணும் ஒரு பிரிவு, கடற்பகுதியை கவர்பண்ணும் ஒரு பிரிவு என நான்கு பிரிவுகளாக குடாரப்பில் பொக்ஸ்சாக அடிக்கப்பட்டிருந்தது.

அதேவேளை ஒரு பெரும் நீரேரியைக் கடக்க வேண்டும். இத்தாவிலுக்கிடையில் இராணுவ வேலி ஒன்றை அமைக்கவேண்டி இருந்தது. அதில் கடற்புலிகளின் படகு சேவைக்காக ஒருபகுதிகரையில், ஒரு படகு அணி மறுகரையில். ஒரு படகு சேவை இதே போன்று இத்தாவில் பகுதி; அந்தப் பகுதி எழுதுமட்டுவாள் பகுதிக்கு உதவிக்கு வரும் படைகளை தடுத்து நிறுத்த ஒரு பெரும் படைப்பிரிவு. மறுகரையில் ஆனையிறவில் இருந்து தப்பிவந்து சப்போட்டுக்கு வரும் படையினரை கவர்பண்ண ஒரு பெரும் படைப்பிரிவு. கிளாலிப் பகுதியால் வரும் இராணுவத்தைத் தடுப்பதற்காக ஒரு படைப்பிரிவு. கண்டல் பகுதியை கவர் பண்ண ஒரு படைப்பிரிவு என நான்கு பெரும் படைப்பிரிவுகள் மொத்தமாக உங்களுக்கு குறிப்பிட்டுள்ளேன். இதில் நான்கு படைப்பிரிவு. அங்கு நான்கு படைப்பிரிவு கண்டலுக்கு ஒரு படைப்பரிவு என மொத்தமாக ஒன்பது படைப்பிரிவுகளை யும் கடற்புலிகள் தரையிறக்கியாக வேண்டும். ஒன்பது படைப்பிரிவு என்றால் 1200 பேர். மீதி கடற்புலிகள் அணியையும் ஈடுபட்ட முக்கிய அணிகளையும் நான் குறிப் பிட விரும்புகிறேன். சாள்ஸ் அன்ரனி சிறப்புப்படையை மிகவும் இரகசியமாகத் தரை யிறக்க வேண்டியிருந்தது. தரையில் இருக்கும் எதிரிக்குத் தெரியாமல் ஒரு பெரும் படை அணியைத் தரையிறக்க வேண்டும். தளபதி சூசை அவர்களிடம் கேட்டேன். இரவு 8.30 அல்லது 8.45 மணிக்குள் உங்களால் இரகசியமாக இறக்கித் தரமுடியுமா என்று அவர் உறுதிமொழி அளித்தார். அவரது தளபதிகள், போராளிகள் மத்தியில் கேணல் சூசை எமக்கு உறுதி தந்தார். இந்த இரகசிய அணியை நான் நிச்சயமாகத் தரையிறக்குவேன் என்று. அடுத்ததாக முக்கிய பொறுப்பாளர்களை தரையிறக்க வேண்டும். அடுத்ததாக மாலதி படை அணியை தரையிறக்க வேண்டும். சோதியா படைஅணியை தரையிறக்க வேண்டும். இம்ரான் பாண்டியன் விசேட படை அணிகளை தரையிறக்க வேண்டும். கடற்புலிகளின் அணிகளை தரையிறக்க வேண்டும் இப்படி பல அணிகளை தரையிறக்க வேண்டி இருந்தது. அப்போது கூறினார் 24 மணி நேரத்தினுள் தரை யிறக்கியே தீரவேண்டும். தரைப்படைக்கு கடலில் இறங்கிய அனுபவம் இல்லை. எப்படி படகுகளில் ஏறுவது என்றே தெரியாது அப்போது கடலில் என்ன நடக்கும், தரையில் எவ்வாறு தரை யிறங்க வேண்டும் அதற் கான பொறுப்பாளர் களை சரியாக நியமித்து பாதுகாப்பாக வண்டியில் ஏற்றுவதற்கான அணி களை நிறுத்தி இருந்தார். கடலில் வரும் போது பிரச்சினைகள் ஏற்படின் அதற்கான அணிகளை நிறுத்தி இருந்தார். தரையிலிருந்து ஆட்களை எடுப்ப தற்கு அணிகளை நிறுத்தியிருந்தார். அந்த வேளை தாக்குதல் 26ம் திகதி இரவு ஆரம்பமானது. ஆறுமணி அளவில் முதலாவது அணி படகில் ஏற்றப்பட்டது. சரியாக 8.45 மணிக்கு தரையில் நின்ற கடற்புலிகள் அணியும் தரையில் நின்ற வேவு அணியும் ஒரு பிரச்சினையும் இன்றி முதலாவது அணியை மிகவும் இரகசியமாக கடற் புலிகள் குடாரப்புப் பகுதியில் தரை இறக்கி விட்டார்கள் என்று அறிவித்தார்கள். அப்போது எமக்கு மிகவும் நம்பிக்கையாக இருந்தது. அவர்கள் போகவேண்டிய இடத்தை அடைந்துவிட்டார்கள். இனி பிரச்சினை இல்லை நாம் இனி எப்படியும் இறக்கப்படுவோம் என்ற நம்பிக்கையுடன் இருந்தோம். அப்போது சண்டை ஆரம்பமானது குறுகிய நேரத்தில் படகில் போராளிகளை ஏற்றும் இடத்தை எதிரி கண்டுவிட்டான். சண்டை நடந்துகொண்டிருந்தது. படகில் நாம் வந்துகொண்டிருக்கிறோம். எமக்கு சற்றுத் தொலைவில் கடலில் சண்டை நடந்துகொண்டிருந்தது. நாம் தரையிறங்கும் பகுதியையும் எதிரி கண்டுவிட்டான். அதற்கும் அருகாக மூன்று பகுதியாக சண்டை நடந்து கொண்டிருந்தது. கடலைப் பார்க்கும்போது தீச்சுவாலைகள்தான் தெரிந்தன. பெரும் அமர்க்களமான சண்டை நடைபெற்றுக் கொண்டிருந்தது. கடலில் 3 பிரிவாக சண்டை நடக்கிறது. எமது படைப்பிரிவுகள் ஒருபிரச்சினையும் இன்றி தரையிறங்கு கின்றன. அப்போது கடலில் பார்த்தேன் ஒரு நாடும் மற்றொரு நாடும் எவ்வாறு சமர்புரியுமோ அதைவிட மோசமாக கடற் புலிகள் சண்டைபுரிந்தனர். கடற்புலிகள் வலுப் பெற்றிருக்கிறார்கள் தரையிறங்கும் அணிகளுக்கு பிரச்சினை ஏதுமின்றி தரையிறக்கப்பட்டது என்பது மிகவும் மகிழ்வாக இருந்தது.



எமது கடற்புலிகளின் துரிதமான செயற்பாடு மற்றும் மதிநுட்பமான செயல்களால் தான் இத்தாவிலையும், குடாரப்பு பகுதிகளையும் தக்கவைக்க முடிந்ததுடன் ஆனையிறவையும் மீட்கமுடிந்தது என நான் கூறுவேன். இதனை நீங்கள் சரியான முறையில் விளங்கவேண்டும்.

எம்மைத் தரையிறக்கியது மட்டும் அவர்களின் பொறுப்பல்ல. எமக்கான விநியோகப் பணிகளையும் அவர்களே செய்ய வேண்டி இருந்தது. மருதங்கேணியை உடைத்துக் கொண்டு வந்து உங்களுக்கு சப்பிளை தரமுடியும் என சூசை கூறினார். அப்படியே அந்த கடற் பகுதியில் 27ஆம் திகதி காலை தரையிறங்கவேண்டியிருந்தது. பட்டப்பகலில் சந்திரிகாவின் பெரும்படைகள்.பாரிய கடற்கலங்கள் மற்றும் கனரக ஆயுதங்கள் பெரும் விமானங்கள் கொண்ட படைகளால் என்ன செய்ய முடிந்தது. அதன் பின் நாம் சண்டையைத் தொடர்ந்தோம். நாங்கள் இங்கு நகர்ந்து இத்தாவிலை முழுமையாகக் கைப்பற்றினோம். முழுமையாக பொக்ஸ் அடிக்கப்பட்டது இதில் பெரும் இராணுவ முகாம் ஒன்று இருந்தது. அதை எமது படைகள் தாக்கி இராணுவத்தையும் கொன்று ஆயுதங்களையும் மீட்டன. உதவிக்கு நாகர் கோவிலில் இருந்து வந்த படைகளையும் கொன்று ஆயுதத்தையும் கைப்பற்றின. அதனுடன் உதவிப்படைகள் நின்றுவிட்டன. கண்டிவீதிதான் பிரச்சினையாக இருந்தது. பளைப்பகுதி எழுதுமட்டுவாள் பகுதி கிளாலிப்பகுதிகளுக்காக தளபதி கேணல் துர்க்கா அவர்களை மகளிர்படை நியமித்தது. சாள்ஸ் அன்ரனி படைப்பிரிவை ஆனையிறவுப் பகுதியை நோக்கி பளைப் பகுதியில் நிறுத்தப்பட்டிருந்தது.

மாலதி படையினரை கண்டல் பகுதியை நோக்கி நிறுத்தியிருந்தோம். சிறுத்தை படையணியின் சில பகுதியினர் வந்தனர். அவர்களையும் கண்டல் பகுதியில் நிறுத்தி. நாம் பொக்ஸ்சை முழுமையாக இறுக்கினோம். அப்போது இம்ரான் பாண்டியன் படையணி .விசேட படையணி; சினைப்பர் அணி. ஆர்.பி.ஜி. அணிகள் எங்கு தாக்குதல் என்றாலும் நிறுத்தக்கூடியதாக நிறுத்தப்பட்டிருந்தனர். குறிப்பாக சில விடயங்களைக் கூறவிரும்புகிறேன். இந்தச் சண்டையில் 60 வீதம் மகளிர். 40 வீதம் ஆண்கள் பங்குபற்றினர். பளைப் பகுதியில் 53வது டிவிசனை நிலை நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. இத்தகைய விசேட படையணியுடன் தான் நாம் மோதலுக்கு தயாரானோம். தாக்குதல் ஆரம்பமானது. தலைவரது மதிநுட்பமான மிகவும் முக்கியத்துவமான கரும்புலி அணியால் நாம் தரையிறங்கிப் பார்க்கும்போது பளைக்கு சற்று அண்மையாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஆட்லறிகளும் தீச்சுவாலையாக அழிகின்றன. எமது கரும்புலி அணி துல்லியமாக இலக்குகளை அழித்தது. அதன்பின் மோட்டார் அணி செயல் இழந்து சிறிது நேரம் அமைதியாய் இருந்தது. அந்தநேரம் கண்டிவீதியைக் கைப்பற்ற எதிரி தொடர்ந்து பல தாக்குதல்களை மேற்கொண்டான். இந்தத் தாக்குதலில் வாழ்வா சாவா என்ற பிரச்சினை. பிரபாகரனின் படையா சந்திரிகாவின் படையா என்ற கௌரவப்பிரச்சினையாக மாறிவிட்டது. அவர்களும் முழுமூச்சாக செயற்பட்டனர். ஆனையிறவு யாரிடம் உள்ளதோ அவர்களுக்கு யாழ்ப்பாணம் சொந்தம் என்பது இராணுவரீதியான உண்மை. • அதனால் இராணுவத்தினர் மிகவும் மோசமாகத்தாக்கினார்கள். சந்திரிகா பலாலியில் அனைத்து இராணுவ தளபதி களையும் அனுப்பிவிட்டு அவர்களுடன் 24மணிநேரமும் தொடர்புடன் இருந்தார். பாதுகாப்பு அமைச்சர் அநுருத்த ரத்வத்த அவர்களும் பலாலியில்தான் மிகவும் நம்பிக்கையுடன் இருந்தார். அவருக்கு களநிலை தெளிவாகத் தெரியாது. 53-வது படைப்பிரிவு எம்முடன் கடும்சண்டை யில் ஈடுபட்டு சடலமாகவும் காயமடைந் தும் பலாலிக்கு போய் கொண்டிருந்தது. நாம் பிடிப்பது.திரும்பவும் அவன் பிடிப்பது. அது மாறிமாறி நிகழ்ந்து கொண்டிருந்தது. பெரும் ரணகளமாக மாறியது.இத்தாவில் பகுதியில் எமது போராளிகள் மிகவும் துணிவாகக் களமாடியதை என்னால் இப்பொழுது நினைத்தாலும் வித்தியாசமான உணர்வு தோன்றுகின்றது. மகளிர் படையணி தமது பகுதி

(7ஆம் பக்கம் பார்க்க)

# சிறிலங்கா கடற்படையின் நடவடிக்கையால் திருமலையில் மக்கள் பெரும் விசனம்

(திருமலை)

**திருகோணமலை மாவட்டத்தின் கரையோரக் கிராமங்களில் சிறிலங்கா படையினரின் கெடுபிடி நடவடிக்கைகளால் மக்கள் பெரிதும் விசனமடைந்துள்ளனர். இது குறித்து பல்மான கண்டனத்தையும் வெளிப்படுத்தியுள்ளனர்.**

திருகோணமலையின் கரையோரக் கிராமங்களில் சிறிலங்கா கடற்படையினர் வாகனங்களில் செல்வோரை மறித்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

சாம்பல்தீவுச்சந்தி போன்ற பகுதிகளில் நிலைகொண்டுள்ள கடற்படையினர் அந்தப் பகுதியினூடாகச் செல்லும் வாகனங்களை வழிமறித்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

சமாதானச் சூழ்நிலையில் கடற்படையினரின் இத்தகைய நடவடிக்கைகள் குறித்து பொது மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

## - முறிகண்டிப்பகுதி வீதியில் - வாகனங்கள் தரித்திருப்பதால் விபத்துக்கள் அதிகரிப்பு

(அலுவலக செய்தியாளர்)

முறிகண்டி ஆலயப்பகுதிகளில் போக்குவரத்தில் ஈடுபடும் வாகனங்கள் வீதியில் தரித்து நிற்பதால் வீதிவிபத்துக்கள் அதிகரித்த வண்ணமுள்ளன.

முறிகண்டிச் சந்தியில் பார ஊர்திகளும், மற்றும் வாகனங்களும் நிறுத்தப்படுவதால் கடந்த வியாழனன்று ஒரு உழவு இயந்திரமும், கயஸ் வாகனமும் மோதி விபத்துக்குள்ளாகின. இதே போன்று நேற்று முன்தினம் மோட்டார் சைக்கிளும் துவிச்சக்கர வண்டியும் மோதி விபத்துக்குள்ளாகின.

இதுபோன்ற விபத்துக்கள், இவ்விடத்தில் வாகனங்கள் தரிப்பதால் தொடர்ந்தவண்ணமுள்ளதாக முறிகண்டிப்பகுதி வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர். (பா)

## கண்டெடுப்பு

(அலுவலக செய்தியாளர்)

தேசிய அடையாள அட்டை ஒன்று கண்டெடுக்கப்பட்டு ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சுப்பிரமணியம் தர்மராசா 653032900V இயற்றாலை, வரணி என்ற பெயருடைய இந்த அடையாள அட்டையை உரியவர் அலுவலக நேரங்களில் கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் பெற்றுக் கொள்ளவும். (பா)

# கிளி.யில் மீள்குடியேறியோருக்கு உலர் உணவு வழங்க நடவடிக்கை!

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்ட மீள்குடியேறிய மக்களுக்கான முதலாம் கட்ட உலர்உணவு வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கிளி.அரச அதிபர் தி.இராசநாயகத்தின் பணிப்புரைக் கமைய கரைச்சிப் பிரதேசச் செயலர் பொன் நித்தியானந்தனின் வேண்டுகையின் பெயரில் கிராம சேவை அலுவலர்களினால் உலர் உணவு வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (சோ.லோ)


## தனியார் கல்வி நிறுவனங்களிற்கான முக்கிய அறிவித்தல்

எமது கட்டுப்பாட்டுப் பகுதியில் இயங்கிவரும் அனைத்துத் தனியார் கல்விநிறுவனங்களும் தொழிற் பயிற்சி நிறுவனங்களும் எதிர்வரும் 01-04-2003 தொடக்கம் 10-04-2003 வரையான காலப்பகுதிக்குள் கிளிநொச்சியில் அமைந்துள்ள அரசியல்துறை நிதிப்பிரிவுக் காரியாலயத்தோடு தொடர்புகொண்டு பதிவுச்சான்றிதழினைப் புதுப்பித்துக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம். மேலும் புதிதாக ஆரம்பித்து இதுவரை பதிவினை மேற்கொள்ளாத நிறுவனங்களையும் தொடர்பு கொள்ளுமாறும் கேட்டுக் கொள்கின்றோம்.

**தனியார் கல்வி நிர்வாகப்பிரிவு,**
**அரசியல்துறை,**
**தமிழீழ விடுதலைப்புலிகள்,**
**தமிழீழம்.**

(சி-8039)



**சுகாதார, போசணை, நலனோம்பு அமைச்சு.**
**மாணவ தாதிமார் பயிற்சியின் பொருட்டு**

## ஆட்சேர்த்துக்கொள்ளல் - 2003

மேற்படி பயிற்சி நெறிக்கு சுகாதார சேவைத் திணைக்களத்தின் கீழ், மாணவ தாதிமார் பயிற்சியின் பொருட்டு ஆட்சேர்த்துக்கொள்வதற்கு கீழ் குறிப்பிடப்படும் தகைமைகளையுடைய திருமணமாகாத ஆண்/பெண் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. (ஆட்சேர்த்துக் கொள்ளும் மொத்த எண்ணிக்கையில் 05 % ஆண்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.)

**கல்வித்தகைமைகள்:-**

அ. 2000,2001ஆம் ஆண்டுகளில் க.பொ.த.(உ/த) தோற்றி குறைந்த பட்சம் விஞ்ஞானத்துறையில் மூன்று பாடங்களில் தேர்ச்சி பெற்றிருத்தல்.

ஆ. க.பொ.த(சா/த) இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாது சிங்களம்/ தமிழ், கணிதம், விஞ்ஞானம் ஆகிய விடயங்கள் உட்பட 04 திறமைச் சித்திகளுடன் 06 விடயங்களில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.

கல்வித் தகைமைகளை உறுதிப்படுத்தும் பொருட்டு மேற்படி இரண்டு பரீட்சைகளினதும் பெறுபேற்றுச் சான்றிதழ்களின் நிழற்படப்பிரதிகளை இணைத்து அனுப்பிவைத்தல் வேண்டும்.

**ஏனைய தகைமைகள்:-**

அ. 2002,12,31ந் திகதியில் 18 வயதுக்கு குறையாமலும் 30 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

ஆ. உயரம் 4அடி 10 அங்குலத்திற்கு குறையாமல் இருத்தல் வேண்டும்.

இ. திருமணமாகாதவராக இருத்தல் வேண்டும்.

ஈ. நாட்டில் எப்பாகத்திலும் கடமையாற்றக்கூடியவராக இருத்தலும், நல்ல தேகாரோக்கியம் உடையவராகவும் இருத்தல் வேண்டும்.

உ. தான் விண்ணப்பிக்கும் மாவட்டத்தில் மூன்று வருடங்கள் குடியிருப்பை உறுதிப்படுத்துவதன் பொருட்டு, வாக்காளர் பட்டியலின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதியொன்றை இணைத்து அனுப்புதல் வேண்டும். விண்ணப்பதாரியின் பெயர் வாக்காளர் பட்டியலில் குறிப்பிடப்படாது விடில் அவரது பெற்றோரின் பெயர்கள் வாக்காளர் பட்டியலில் இருத்தல் வேண்டும். அவ்வாறு குறிப்பிடப்பட்டிருப்பின் பெற்றோரின் பெயர்களை நிரூபிப்பதன் பொருட்டு பிறப்பு சான்றிதழின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதியொன்றையும் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

மேற்படி தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகள் மட்டும் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள் என்பதுடன், அவ்விண்ணப்பதாரிகள் 2000,2001 ஆண்டுகளில் உயர்தரப் பரீட்சையில் பெற்ற புள்ளிகளின் அடிப்படையில் சனத்தொகை விகிதாசாரப்படி தேவையான எண்ணிக்கையினர் தேர்ந்தெடுக்கப்படுவர்

இதற்கான விண்ணப்பப்படிவத்தினையும் ஏனைய விபரங்களையும் எமது பணிமனையில் பெற்றுக் கொள்ளலாம்.

**க. நாகேசுபரன்,**
**நிர்வாக உத்தியோகத்தர்,**
**மாகாண சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளருக்காக,**
**முல்லைத்தீவு.**

(சி-7820)



**சிந்தனைக்கு**

மக்களின் விடுதலை உணர்வை அடக்கு முறையால்அழித்துவிட முடியாது. உலக வரலாறு பகரும் உண்மை இது.

- தமிழீழத் தேசியத் தலைவர்.

ஈழநாதம்
EELANATHAM
யாழ். சாலை, கிளிநொச்சி. 30-03-2003

## நியாயமான கோரிக்கை

நிரந்தர நியமனம் கோரித் தொண்டராசிரியர்கள் நடத்தும் சாத்வீக ரீதியிலான போராட்டம் சுமார் ஒரு மாதம் வரையில் நீடித்துவருகின்றது. இத்தொண்டர் ஆசிரியர்களுக்கு ஆதரவாக தமிழர் ஆசிரியர் சங்கம் போன்றவையும் சில போராட்டங்களை நடத்தியுள்ளன. ஆயினும், இன்னமும் அரசாங்கத் தரப்பிடம் இருந்து உறுதியான பதில் எதுவும் கிடைக்கப் பெறவில்லை.

தொண்டர் ஆசிரியர்கள் என்பவர்கள் தேவைக்கு மேலதிகமாகப் பாடசாலைகளில் சேர்த்துக் கொள்ளப்பட்டவர்கள் அல்ல. வடக்கு-கிழக்கு மாகாணத்தில் காணப்பட்ட பெரும் ஆசிரியர் பற்றாக்குறையை நிரப்பும் பொருட்டு தேவையின் நிமித்தம் சேவைக்கென அழைக்கப்பட்டவர்கள் ஆகும். அதாவது பாடசாலைகளில் நிலவிய பாரிய ஆசிரியர் பற்றாக்குறை காரணமாக கல்வி கற்பிக்கும் பணி தடைப்படாது தொடரும் பொருட்டு தேவையின்பால் சேர்த்துக்கொள்ளப்பட்டவர்கள்.

அத்தோடு நிரந்தர நியமனம் கோரும் தொண்டர் ஆசிரியர்கள் அப்பதவிக்கான கல்வித் தகைமை அற்றவர்களும் அல்ல. ஏற்கனவே நேர்முகப் பரீட்சை மூலம் பட்டியல் படுத்தப்பட்டு அமைச்சரவைக்குப் பெயர்ப்பட்டியல் சமர்ப்பிக்கப்பட்டவர்கள். மேலும் இவர்களுக்கு நியமனம் வழங்கப்படுமென வாக்குறுதி அளிக்கப்பட்டு மூன்று வருடங்களும் கடந்துவிட்டன.

இதேவேளை, இத்தொண்டர் ஆசிரியர்களுக்கு வேதனங்கள் எவையும் வழங்கப்பட்டதாகவும் இல்லை. ஒருவகையில் பார்த்தால் அரசாங்கம் செய்யவேண்டிய பணியினை இத்தொண்டராசிரியர்கள் மேற்கொண்டனர் எனலாம். அதாவது, அரசாங்கம் ஆசிரியர்களை நியமிக்காத நிலையில் பாடசாலைகளில் கல்விப்பணி தொடர்வதற்காக இவர்களின் சேவை அவசியமானதாக இருந்தது.

இது ஒருபுறம் இருக்க, அவர்கள் வடக்கு-கிழக்கில் பணிபுரிந்த காலப்பகுதியானது மிகவும் அபாயகரமானதாகும். அதாவது ஒருபுறம் பெரும்யுத்தம் ஒன்று நடந்துகொண்டிருக்கையிலும், மறுபுறம் பெரும் பொருளாதாரத்தடை ஒன்றை அரசு அமுல்படுத்திக் கொண்டிருந்தவேளையிலும் மாணவர்களின் கல்வித் தேவைகளைப் புரிந்துகொண்டு இவர்கள் சேவையாற்றியவர்கள்.

இவ்வாறாகத்; தன்னலம் பாராது சேவை செய்த தொண்டர் ஆசிரியர்களுக்கு சிறிலங்கா அரசாங்கம் ஏற்கனவே வாக்களித்தது போன்று நிரந்தர நியமனம் வழங்குவதை இழுத்தடித்து வருவது ஏமாற்று நடவடிக்கையாகும். அரசாங்கம் இத்தகைய நியமனங்களை வழங்காது இழுத்தடித்தல் என்பது மாற்றாந்தாய் மனப்பான்மையை ஒத்ததாகும்.

இதேவேளை, தொண்டர் ஆசிரியர்கள் தற்பொழுது நடத்திவரும் போராட்டமானது மாணவர்களின் கல்வியைப்பெருமளவில் பாதிப்பதாக மாறியுள்ளது. அதாவது, இத்தொண்டர் ஆசிரியர்கள் பாடசாலைக்குச் செல்லாமை காரணமாக பாடசாலையில் கல்வி கற்பித்தல் செயற்பாடு பெரிதும் பாதிப்பிற்குள்ளாகியுள்ளது. சில இடங்களில் பாடசாலைகளைக்கூட மூடவேண்டிய நிர்ப்பந்தம் உருவாகியுள்ளது.

இந்நிலையானது உடனடியாக நீக்கப்படவேண்டும். ஆனால் இதனைப் புதிய நியமனங்கள் மூலமோ அன்றி வேறுவழிமுறைகள் மூலமோ அரசாங்கத்தால் உடனடியாக நிவர்த்திசெய்தல் என்பது சாத்தியமானதல்ல. அத்தோடு இத்தொண்டர் ஆசிரியர்களைப் புறம் தள்ளிவிட்டு ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புதல் என்பது நீதியான நடவடிக்கையாகவும் கொள்ளத்தக்கதல்ல.

இதற்கமைவாகத்தான் தமிழர் ஆசிரியர் சங்கங்கள் போன்றவை இத்தொண்டர் ஆசிரியர்களுக்குத் தமது ஆதரவைத் தெரிவித்ததோடு -போராட்டங்களிலும் ஈடுபட்டனர். இதனைப் போன்றே தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவை போன்ற அமைப்புக்களும் இத் தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கக் கோரி பிரதமர்ரணில்விக்கிரமசிங்கவிற்குமகஜர்களை அனுப்பிவைத்துள்ளனர்.

ஆகையினால் இன்றைய தேவை கருதியும், அவர்களின் சேவை கருதியும் இத்தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படுதல்வேண்டும். இது ஒரு நியாயபூர்வமானதும், மனிதாபிமான நடவடிக்கையாகவும் இருக்கும். அவ்வாறு இல்லாதுவிடில் வடக்கு-கிழக்கில் கல்விச் சேவை பாதிக்கப்படுவது தவிர்க்க முடியாது போகும். இது ஏற்கனவே பல சவால்களையும், நெருக்கடிகளையும் சந்தித்து நிற்கும் வடக்கு-கிழக்கு மாகாணத்தில் உள்ள தமிழ் மாணவர்களின் கல்வியில் மேலும் நெருக்கடிகளைத் தோற்றுவிப்பதாகவே இருக்கும்.

# இணக்கப்பாடில்லாமல் முடிவடைந்த சி.சு.க. -ஜே.வி.பி. பேச்சுவார்த்தை!

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கும் ஜே.வி.பி.க்கும் இடையில் மீண்டும் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்ற போதும் இணக்கப்பாடு ஏற்படவில்லை எனச் செய்திகள் தெரிவிக்கின்றன.

சனாதிபதி மாளிகையில் நேற்று முன்தினம் நடைபெற்ற இப்பேச்சுவார்த்தையின்போது தேசியக் கூட்டணி அமைப்பது குறித்தும், இலங்கையின் தேசியப் பிரச்சினை தொடர்பாக எடுக்க வேண்டிய நிலைப் பாடு குறித்தும் ஆராயப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இரண்டு கட்சிகளுக்கும் இடையில் கூட்டமைப்பு அமைப்பது குறித்து கடந்த கால சந்திப்புக்களில் பல இணக்கங்கள் ஏற்பட்டிருந்தன.

இந்நிலையில், இரண்டு கட்சிகளுக்கும் இடையில் இது குறித்து பேச்சுவார்த்தை நடத்தி விசேட தீர்மானங்கள் நிறைவேற்றப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையின் தேசிய பிரச்சினைக்கான தீர்வு குறித்து இரண்டு கட்சிகளுக்கும் இடையில் பொதுவான இணக்கப்பாடு இன்னமும் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

# தொழிலாளர் உரிமைகளைப் பாதுகாக்க தொழிற்சங்க கூட்டமையம் அமைப்பு

(கொழும்பு)

நூற்றுக்கும் மேற்பட்ட தொழிற்சங்கங்கள் ஒன்றிணைந்து ஐக்கிய இலங்கைத் தொழிலாளர்உரிமைகளைப் பாதுகாக்கும் கூட்டமைப்பு ஒன்றை அமைத்துள்ளன.

இந்தக் கூட்டமைப்பில் எதிர்க்கட்சியில் அங்கம் வகிக்கின்ற தொழிற்சங்கங்கள் அனைத்தும் இணைந்து கொண்டுள்ளன.

சிறிலங்கா அரசாங்கத்தின் தனியார் மயமாக்கல் கொள்கைக்கு எதிர்ப்புத் தெரிவிப்பதற்காகவும் சனநாயகத்தைப் பாதுகாக்க நடவடிக்கை எடுப்பதற்காகவும் இந்தக் கூட்டமைப்பை உருவாக்கி இருப்பதாகத் தொழிற்சங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.



மீட்கப்பட்ட வெடிபொருட்களுடன் மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பிரிவின் விசேட பயிற்சிபெற்ற அணியினரையும் அவை ஆனையிறவில் தகர்த்தழிக்கப்படுவதையும் காண்க. (பா)

## போர்க்கள...

யில் தாமே தனித்துநின்று சண்டையிட்டனர். இராணுவ கொமாண்டோக்கள் தினமும் 30,40,50 என மடிந்து கொண்டிருந்தனர். இப்போதும் இத்தாவில் பகுதிக்கு நீங்கள் போய்ப் பார்க்கலாம். எத்தனை எலும்புக்கூடு கிடக்கிறது என்று. இந்த வகையில் 34 நாட்கள் யுத்தம் நடந்தது. நாம் முற்றுகையிட்ட பகுதியில் மக்களும் சிக்கியிருந்தார்கள். உடனடியாக தளபதி சூசை அவர்கள் கடலுக்குள்ளால் தான் வன்னிக்கு அனுப்புவதாகக் கூறினார். நாம் அவர்களை ஆபத்தின்றி எடுத்து அனுப்பினோம். பக்குவமாக வன்னியில் தங்கவைக்கப்பட்டனர். இல்லாவிட்டால் அனைத்துமக்களும் கொல்லப்பட்டிருப்பார்கள். நாம் மக்களை அனுப்பிய பின்னர் தான் எதிரிமீது தாக்குதல் நடத்தினோம். 53டிவிசன் இராணுவமும், அதன் பொறுப்பதிகாரியும் தம்மால் முடியாது என கூறிவிட்டனர். நிச்சயமாக இது வெல்லமுடியாது என காமினி கெட்டியாராச்சி கூறிவிட்டார். உடனடியாக அவர் மாற்றப்பட்டார். அதன்பின் இந்த முற்றுகையை அழிப்பதற்கு பல இராணுவ உயர்தளபதிகள் வந்து மோதினார்கள். உங்களிடம் கூற விரும்புகிறேன். ஒருநாள் எங்களை முற்றாக முற்றுகையிட்டு விட்டார்கள். சந்திரிகாவிற்கு அறிவிக்கப்பட்டது. தாம் பால்ராஜை உயிருடன் பிடிப்பதா? அல்லது அவரை அழிப்பதா? என்று. சந்திரிகா முடிந்தால் பிடியுங்கள் அல்லது சடலமாக எடுங்கள் என கூறினாராம். சரியாக12 மணித்தியாலத்திற்குள் ஒரு பழுதும் இல்லாமல் 2 பவள், 2 ராங், சலாடின், 1துருப்புக்காவி என்பவற்றை நாம் மீட்டு, அதனால் எதிரி மீது திருப்பித்தாக்கினோம். எமது போராளிகள் அதுமட்டுமன்றி 120 க்கு மேற்பட்ட உடல், ஆயுதங்கள் அப்படியே கைப்பற்றப்பட்டன. மற்றும் இத்தாவில் பகுதியில் அன்று நடந்த யுத்தம் மிகவும் வித்தியாசமான ஒரு யுத்தம். எமது பெண் போராளிகள் கைகலப்பில் கூட ராணுவத்துடன் ஈடுபட்டனர். அவ்வளவு அருகில் சண்டை நடந்தது.

இறுதியில் மகளிர் படையணி இராணுவ பவளொன்றைக் கைப்பற்றி அதனைக் கொண்டே எதிரி மீது மகளிர் போராளிகள் தாக்கினார்கள். இதன்பின் மீண்டும் எமது முழுமையான கட்டுப்பாட்டில் அந்த முற்றுகை வந்தது. இறுதியாக அந்த வீதியை கைப்பற்ற இராணுவம் பெரும் முயற்சியில் இறங்கியது.

பலத்த தாக்குதல்கள் மத்தியில் எமது பகுதியை தக்க வைத்தோம். அதன்பின் தளபதி கேணல் தீபனும், கருணா அம்மாவின் அணிகளும் இணைந்து இயக்கச்சிப் பகுதியை நோக்கி மிகவும் வேகமாகத் தாக்கி முன்னேறினார்கள். கிளாலியை நோக்கி ஒரு படைப்பிரிவு தாக்குதலை ஆரம்பித்தது. ஆனையிறவை நோக்கி ஒரு படைப்பிரிவு தாக்குதலை ஆரம்பித்தது. குறிப்பிட்ட நேரத்தில் இயக்கச்சி வீழ்ந்துவிட்டது. அதன் பின் ஆனையிறவு முக்கிய தளத்தை கைப்பற்றினார்கள். அதன்பின் பெரிய உப்பளம், சிறிய உப்பளம் குறிஞ்சாத்தீவு என்ற தண்ணி இல்லாத உப்புப் பகுதிக்குள் இராணுவம் போய் தேங்கியது. தண்ணீர் இல்லாமல் பலர் அழிந்தார்கள். பின்னர் அதனுள் வைத்து தாக்கியதில் பல இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். கடலால் தப்பி ஓடமுற்பட்ட படைகளை கடற்புலிகள் வந்து வழிமறித்து தாக்கி அழித்தார்கள். தரைப்பகுதியால் ஓடிய இராணுவத்தை தாக்கி பல இராணுவத்தை கொன்று ஏராளமான ஆயுதத்தை மீட்டனர். அத்தனை இராணுவத் தளபதிகளாலும் சந்திரிகாவால் ரத்வத்தயால், இந்த சண்டையை வெற்றி கொள்ள முடியவில்லை. ஆனையிறவைக் காப்பாற்ற முடியவில்லை. இதற்குப் பின்னர் தான் நிச்சயமாக இராணுவ ரீதியாக விடுதலைப் புலிகளை ஒன்றும் செய்யமுடியாது என்ற உண்மையை இராணுவம் விளங்கிக் கொண்டது. தளபதிகளும் புரிந்து கொண்டனர். இப்படி இருந்தும் ஒரு நப்பாசை கொண்டு தீச்சுவாலை நடவடிக்கையை தமது முழுபலத்தையும் வைத்து இறுதியாக செய்து பெரும் இழப்புகளுடன் தப்பி ஓடினார்கள்.

எனவே, இத்தகைய வெற்றிகளுக்கு உறுதுணையாக நின்றவர்கள் எமது மக்கள். எமது மக்கள் அன்றுபோல் இன்றும், இனி வரும் காலங்களிலும் செயற்பட வேண்டும் எனவும் கூறினார்.

(ஸோ. பா)

# வை.கோ., நெடுமாறனை விடுவிக்கக்கோரி தமிழகத்தில் உண்ணாவிரதம்!

பொடோ சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக்கழக பொதுச் செயலர் வை.கோ. மற்றும் பழ.நெடுமாறன் ஆகியோரை விடுவிக்கக்கோரி நேற்று தமிழகத்தில் உண்ணாவிரதப் போராட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன.

மாநிலம் தழுவிய இந்த உண்ணாவிரதப் போராட்டங்களில் திராவிட முன்னேற்றக்கழகம், மறுமலர்ச்சித் திராவிட முன்னேற்றக் கழகம், தமிழ் மாநில காங்கிரஸ், இந்திய கம்யூனிஸ்ட் ஆகிய கட்சிகள் பங்கேற்றன.

சிறையில் இருக்கும் வை.கோ. மற்றும் பழ. நெடுமாறன் ஆகியோரும் நேற்று உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.திராவிட முன்னேற்றக்கழகத் தலைமையில் ஒழுங்கு செய்யப்பட்ட இப்போராட்டம் அவர்கள் விடுதலை செய்யப்படும் வரை தொடரும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# க.பொ.த (சா/த) பரீட்சையில் தகவல் தொழில் நுட்பம் ஒரு பாடம்

(கொழும்பு)

க.பொ.த சாதாரணப் பரீட்சையில் அடுத்த ஆண்டிலிருந்து தகவல் தொழில் நுட்பம் ஒரு பாடமாகச் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளது என கருணாசேன கொடித்துவக்கு கூறியுள்ளார்.

இலங்கையில் கல்வி அறிவுள்ளவர்களின் விகிதாசாரம் அதிகளவில் உள்ள போதிலும் தகவல் தொழில்நுட்ப அறிவு பெற்றவர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவானதாகவுள்ளது. எனக் கூறியுள்ளார்.

# இணையத்தளம், மென்பொருளாக்கம் தொடர்பான கணினிப் பயிற்சிப்பட்டறை

(அலுவலக செய்தியாளர்)

தமிழீழ மாணவர் அமைப்பின் ஆதரவில் தமிழ் தகவல் தொழில் நுட்ப ஒருங்கமைப்பினர் நடாத்திய இணையத் தளம், மென்பொருள் உருவாக்க கணினிப் பயிற்சிப் பட்டறை நேற்று கிளிநொச்சி தூயவன் அரசறிவியற் கல்லூரியில் நடைபெற்றது.

த[illegible] மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் ராணிமைந்தன் தலைமையில் நடைபெற்ற இப் பயிற்சிப் பட்டறை ஆரம்ப நிகழ்வில், மங்கல விளக்கினை வன்னி மறைக்கோட்ட முதல்வர் தேவசகாயம் அடிகள், கிளி. வலயக் கல்விப் பணிப்பாளர் ப. அரியரத்தினம், தமிழர் புனர்வாழ்வுக்கழகத் துணைப் பொறுப்பாளர் எஸ். இனியவன் ஆகியோர் ஏற்றி வைக்க தமிழீழத் தேசியக் கொடியினை அரசியல்துறையைச் சேர்ந்த ரஞ்சன்லால் ஏற்றி வைத்தார்.

தமிழ் தகவல் தொழில்நுட்ப விஞ்ஞானமாணி பு. செந்தூரன், தொழில்நுட்ப வன்னி இணைப்பாளர் தயாபரன், அமைப்பாளர்களில் ஒருவரான ஜெயதீபன் ஆகியோர் விரிவுரைகளை வழங்கினர்.இதில் 112 கணினிப் பயிற்சியாளர்கள் கலந்து கொண்டனர். இன்றும் மேற்படி பயிற்சிப்பட்டறை இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ, லோ)

- யாழ். மாநகரசபைக் காணியில் -

# முகாம் அமைக்கும் நடவடிக்கை நேற்று படையினர் ஆரம்பித்தனர்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபைக்குச் சொந்தமான காணியில் படை முகாம் அமைக்கும் நடவடிக்கையில் நேற்று முதல் சிறிலங்காப் படையினர் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

குடாநாட்டு மக்களின் பல்வேறு எதிர்ப்புகளுக்கு மத்தியிலும் யாழ். மாநகர சபைக்குச் சொந்தமான காணியில் படையினர் நேற்றுக் காலை 10.00 மணி முதல் புதிய முகாம் அமைப்பதற்கான கட்டட வேலைகளை ஆரம்பித்துள்ளனர்.

இப்பணியில் இருநூறுக்கும் மேற்பட்ட படையினர் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர்.

இராணுவ வாகனங்களில் கட்டடப் பொருட்களும், இராணுவ தளபாடங்களும் இறக்கப்பட்டு இப்பணி துரிதமாக மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

பெரியளவில் அமைக்கப்பட்டு வரும் இந்த முகாமினால் இப்பகுதியில் உள்ள இரண்டு பாடசாலைகள், இரண்டு வணக்கஸ்தலங்கள் மற்றும் சுப்பிரமணியம் பூங்காவின் செயற்பாடுகள் நெருக்கடிக்குள்ளாகியுள்ளன.

# தேசிய க. கல்லூரிகளுக்கிடையில் மாபெரும் விளையாட்டுப் போட்டி

(வவுனியா)

தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்கிடையிலான மாபெரும் விளையாட்டுப் போட்டிகள் வவுனியா தேசியக் கல்வியியற் கல்லூரியில் நடைபெறவுள்ளன.

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியில் இன்றும் நாளையும் நடைபெறவுள்ள இம் மாபெரும் விளையாட்டுப் போட்டியில் கிறிக்கெற், உதைபந்தாட்டம் போன்ற விளையாட்டுக்கள் நடைபெறவுள்ளன.

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி பேணாட் தலைமையில் நடைபெறும் இவ் விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராக வடக்கு- கிழக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் எஸ். அமிர்தலிங்கமும், சிறப்பு விருந்தினராக வவுனியா மாவட்ட அரச அதிபர் கணேஸ் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இப் போட்டியில் இலங்கையில் உள்ள பதினைந்து தேசிய கல்வியியற் கல்லூரிகள் பங்கு பற்றவுள்ளதாக வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் விளையாட்டுக்குழு அறிவித்துள்ளது. (10)

## கல்வி, சுகாதார குழுக்களின் கூட்டம்

கிளிநொச்சி மாவட்ட கல்விக் குழுக்கூட்டம் எதிர்வரும் முதலாம் திகதி காலை 10.00 மணிக்கு கிளிநொச்சி அரச அதிபர் தி. இராசநாயகம் தலைமையில் கிளி. மாவட்ட அரச செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அன்றையதினம் பகல் 11.30 மணிக்கு அரச அதிபர் தலைமையில் மாவட்ட சுகாதாரக் குழுக் கூட்டமும் இடம்பெறவுள்ளதென கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரச அதிபர் நா. வேதநாயகன் தெரிவித்துள்ளார். (சோ)

# புலிகளிடம் ஆயுதம் இருக்கும்வரை வடகிழக்கில் தேர்தல்நடத்த முடியாது!

## சிஹல உறுமய கட்சித் தலைவர்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகள் ஆயுதங்கள் வைத்திருக்கும்வரை வட-கிழக்கில் தேர்தலை நடத்த முடியாது என்று சிஹல உறுமய கட்சியின் தலைவர் திலக் கருணாரட்ண கூறியுள்ளார்.

வட-கிழக்கில் உள்ளூராட்சி தேர்தல்களை நடத்த தமிழீழ விடுதலைப்புலிகள் இணக்கம் தெரிவித்திருப்பது பெரும் வெற்றி என்றும் ஆளும் கட்சியினர் கூறிவருவது கேலிக்கூத்து என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

முடியுமானால் சுதந்திரமான தேர்தலை வட-கிழக்கில் நடத்தி காண்பிக்கட்டும் என்றும் அவர் ஆளும் கட்சிக்குச் சவால் விடுத்துள்ளார்.

- மன்னார் உயர்பாதுகாப்பு வலயத்தில் -

# மீளக்குடியேறுதல் தொடர்பாக நேற்று முக்கிய கலந்துரையாடல்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் சிறிலங்காப் படையினரது உயர்பாதுகாப்பு வலயப்பகுதிகளில் மக்களை மீளக்குடியமர்த்துவது தொடர்பான முக்கிய கலந்துரையாடல் நேற்று இடம்பெற்றது.

மன்னார் வாழ்வோதயத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற இக்கலந்துரையாடலில், தமிழீழ விடுதலைப்புலிகள் தரப்பில் மன்னார் மாவட்ட அரசியல் துறையைச் சேர்ந்த மூர்த்தி, இலக்கியன் மற்றும் மன்னார் ஆயர் இராஜப்பு ஜோசப் ஆண்டகை ஆகியோரும் சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சின் செயலர், வன்னிப்பிராந்திய சிறிலங்கா படைத்துறை அதிகாரி, மன்னார் மாவட்ட படைத்துறை அதிகாரி ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதில் யு.என்.எச்.சி.ஆர். பிரதிநிதிகளும், அரசசார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகளும், பொது மக்கள் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். (மி)

## சீருடை வழங்கல்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி பரந்தன் இந்து மகாவித்தியாலயத்தினூடாக மாணவர் சீருடைகளுக்கு விண்ணப்பித்து தற்போது ஸ்கந்தபுரம், அக்கராயன்குளம், மணியங்குளம், கோணாவில், முக்கொம்பன் ஆகிய கிராமங்களில் வசித்து வரும் மாணவர்களுக்கு சீருடைகள் வழங்க நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டுள்ளது.

இவர்களுக்கான சீருடை துணிகள் எதிர்வரும் 4ஆம் திகதி காலை 10.00 மணிக்கு கிளி / குமரபுரம், பரந்தன் இந்து மகா வித்தியாலயத்தில் வைத்து (தற்போது மீண்டும் குமரபுரத்தில் இயங்கிவரும்) கண்டாவளை பிரதேச செயலர் அலுவலக உத்தியோகத்தரால் வழங்கப்படவுள்ளதென பரந்தன் இந்து மகா வித்தியாலய அதிபர் ம.பத்மநாதன் தெரிவித்துள்ளார். (சோ, லோ)

---

### தமிழீழ...

பெண்கள் மேம்பாட்டமைப்பாக உருப்பெறுகின்றோம்.

இந்த அமைப்பு தமிழீழத்தின் அனைத்துப் பெண்களையும் ஒரு கொடியின் கீழ் அணிதிரட்டும் என்று உறுதி எடுத்துக் கொள்கின்றோம். இந்த கட்டமைப்பு பின்வரும் செயற்திட்டங்களை தனது பணிகளாக வரித்துக் கொள்கின்றது.

காலாதிகாலமாக சமூக பிற்போக்குத்தனங்களில் கட்டுண்டு போயுள்ள பெண்களை அத்தளைகளில் இருந்து விடுவித்து விழிப்புணர்வு கொண்ட பெண்களாக மாற்றுதல்.

ஒவ்வொரு பெண்ணினதும் தனித்துவமான ஆற்றலை இனங்கண்டு அவற்றில் உச்சநிலையை அடையும் முகமாக வழிப்படுத்துதல்.தாயகத்தின் ஒவ்வொரு கிராமங்களையும் பொன்கொழிக்கும் பூமியாக மாற்றும் சமூக மேம்பாட்டு போராட்டத்தில் பெண்களும் சம பங்கெடுத்தல்.

ஒவ்வொரு பெண்ணின் பாதுகாப்பையும். சுயகௌரவத்தையும் தாமே தீர்மானித்துக் கொள்ளும் வகையில் அவர்களை உடல் உள ரீதியாக வலுப்படுத்தல்.மேற்கூறிய பெண்களின் அபிலாசைகளை நிதர்சனமாக்கும் வகையில் தாயகத்தை மீட்டெடுப்பதற்கான தேசிய எழுச்சியில் அனைத்து தமிழீழப் பெண்களையும் அணிதிரட்டுதல். ஆகிய பிரகடனங்கள் செய்து கொள்ளப்பட்டன.

இதனைத் தொடர்ந்து காலை அமர்வுகள் முடிவடைந்தன.

இறுதி நிகழ்வுகள் மாலையில் கரடியனாறில் இடம்பெற்றது. இதில் மூத்த தளபதி கேணல் கருணா அவர்கள் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.தொடர்ந்து கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

---

### தரைவழி....

அமெரிக்கப் படையினரைக் கொன்ற தற்கொலை குண்டுதாரியின் சாதனையைப் புகழ்ந்து ஈராக்கிய தொலைக்காட்சி ஒன்றில் தோன்றி சதாம் ஹுசைன் உரையாற்றியுள்ளார். அவரின் குடும்பத்தினரையும் அவர் பாராட்டியுள்ளார். வேறு ஒரு தற்கொலைத் தாக்குதலில் 11 படையினரைக் கொன்றும் இரண்டு இராணுவ டாங்கிகளை அழித்து இரண்டு உலங்கு வானூர்திகளைத் தாக்கிய இராணுவ வீரர்களையும் அவர் பாராட்டியுள்ளார். இப்பொழுது ஈராக்கிய படையினர் நாட்டுப் பற்றுடன் செயல்பட தொடங்கியுள்னர் என அவர் பாராட்டியுள்ளார்.

இதேவேளை, பாக்தாத்தை நோக்கிச் செல்லும் அமெரிக்க, பிரிட்டிஷ் படையினரின் தரைத் தாக்குதல் நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக அமெரிக்கப்படை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

"நடவடிக்கைகளின் இடைநிறுத்தம்" என பெயரிடப்பட்டு ஆறு நாட்களுக்கு தாக்குதல்கள் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

ஈராக்கிய வீரர்களின் பதில் தாக்குதல் நடவடிக்கையும், அமெரிக்க, பிரிட்டிஷ் படையினருக்கு ஏற்பட்ட ஆளணி மற்றும் உணவு, இராணுவப் பொருள்களின் பற்றாக்குறையுமே தாக்குதல் இடைநிறுத்தத்திற்கு காரணம் என தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, பாக்தாத்திற்கு தென்மேற்கே ஈராக்கிய விசேட படைப்பிரிவு மீது அப்பாச்சி உலங்கு வானூர்திகள் நடத்திய தாக்குதலில் குறைந்தது 55 ஈராக்கியப் படையினர் பலியாகியுள்ளனர் என அமெரிக்க இராணுவ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

யுத்த டாங்கிகள் உட்பட 25 இராணுவ வாகனங்கள் சேதமடைந்துள்ளன எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை, அமெரிக்காவின் ஐந்து போர் விமானங்கள், ஆறு ஆள் இல்லாத சிறியரக வேவு விமானங்கள் மற்றும் நான்கு உலங்கு வானூர்திகளை ஈராக் படையினர் சுட்டு வீழ்த்தியதாக ஈராக்கிய தொலைக்காட்சி தெரிவித்தது.

ஒரு அப்பாச்சி உலங்கு வானூர்தியை கைப்பற்றியதாக ஈராக்கிய இராணுவப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

அத்துடன் ஈராக் நடத்திய ஏவுகணைத் தாக்குதலில் குவைத்தில் உள்ள சந்தைக் கட்டடத் தொகுதி ஒன்று சேதமடைந்துள்ளது.

---

### அரசியல்.....

நேற்று இங்கிருந்து புறப்பட்ட இக்குழுவில் சீவரத்தினம் பிரபாகரன், நல்லதம்பி சுதன், ஜெயாநந்தன் திவாகர், மீனாட்சி சுந்தரம் சிவபாலன், கிட்டிண பிள்ளை ஜெயப்பிரகாஷ், கணநாதன் ராஜ்கண்ணா, கந்தையா சுரேந்திரன், பேரின்பநாதன் சிவபரன், சீனித்தம்பி பரமேஸ்வரன், இராசதுரை ஜீவானந்தன், கனேசமூர்த்தி பிரகலாதன், செல்வி சோமசுந்தரம் லோகரஜனி, செல்வி ரேவதி, செல்வி கார்த்திகேயன் சுபைதா, செல்வி சிவநந்தகுரு மோகனா, செல்வி சின்னத்தம்பி சிறிதேவி ஆகியோர் இடம் பெற்றுள்ளனர். இவர்களுடன் வெளிநாட்டிலுள்ள மேலும் ஐவர் இணைந்து கொள்ளவுள்ளமை தெரிந்ததே. (பா)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு மார்ச் மாதம் 30ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.